ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 4.7 – தங்கையை மூக்கும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.7 – தங்கையை மூக்கும்

‡ தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் தடிந்த ⋆
எம் தாசரதி போய் ⋆
எங்கும் தன் புகழா இருந்தரசாண்ட ⋆
எம் புருடோத்தமன் இருக்கை ⋆
கங்கை கங்கை என்ற வாசகத்தாலே ⋆
கடு வினை களைந்திடுகிற்கும் ⋆
கங்கையின் கரை மேல் கை தொழ நின்ற ⋆
கண்டம் என்னும் கடி நகரே ‖ **4.7.1** ‖

சலம் பொதி உடம்பின் தழல் உமிழ் பேழ்வாய்ச் ⋆
சந்திரன் வெங்கதிர் அஞ்ச ⋆
மலர்ந்தெழுந்தணவு மணிவண்ண உருவின் ⋆
மால் புருடோத்தமன் வாழ்வு ⋆
நலம் திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும் ⋆
நாரணன் பாதத் துழாயும் ⋆
கலந்திழி புனலால் புகர் படு கங்கைக் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ‖ **4.7.2** ‖

அதிர் முகம் உடைய வலம்புரி குமிழ்த்தி ⋆
அழல் உமிழ் ஆழி கொண்டெறிந்து ⋆
அங்கெதிர் முக அசுரர் தலைகளை இடறும் ⋆
எம் புருடோத்தமன் இருக்கை ⋆
சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில் ⋆

சங்கரன் சடையினில் தங்கி ⋆
கதிர் முகமணி கொண்டிழி புனல் கங்கைக் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ॥ **4.7.3** ॥

இமையவர் இறுமாந்திருந்தரசாள ⋆
ஏற்றுவந்தெதிர் பொரு சேனை ⋆
நமபுரம் நணுக நாந்தகம் விசிறும் ⋆
நம் புருடோத்தமன் நகர் தான் ⋆
இமவந்தம் தொடங்கி இருங்கடல் அளவும் ⋆
இரு கரை உலகிரைத்தாட ⋆
கமை உடைப் பெருமைக் கங்கையின் கரை மேல் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ॥ **4.7.4** ॥

உழுவதோர் படையும் உலக்கையும் வில்லும் ⋆
ஒண் சுடர் ஆழியும் சங்கும் ⋆
மழுவொடு வாளும் படைக்கலம் உடைய ⋆
மால் புருடோத்தமன் வாழ்வு ⋆
எழுமையும் கூடி ஈண்டிய பாவம் ⋆
இறைப் பொழுதளவினில் எல்லாம் ⋆
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரை மேல் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ॥ **4.7.5** ॥

தலைப்பெய்து குமுறிச் சலம் பொதி மேகம் ⋆
சலசல பொழிந்திடக் கண்டு ⋆
மலைப் பெருங்குடையால் மறைத்தவன் மதுரை ⋆
மால் புருடோத்தமன் வாழ்வு ⋆
அலைப்புடைத் திரைவாய் அருந்தவ முனிவர் ⋆
அவபிரதம் குடைந்தாட ⋆

கலப்பைகள் கொழிக்கும் கங்கையின் கரை மேல் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ‖ **4.7.6** ‖

விற் பிடித்திறுத்து வேழத்தை முறுக்கி ⋆
மேல் இருந்தவன் தலை சாடி ⋆
மற் பொருதெழப் பாய்ந்தரையனை உதைத்த ⋆
மால் புருடோத்தமன் வாழ்வு ⋆
அற்புதம் உடைய ஐராவத மதமும் ⋆
அவர் இளம் படியர் ஒண் சாந்தும் ⋆
கற்பக மலரும் கலந்திழி கங்கைக் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ‖ **4.7.7** ‖

திரை பொரு கடல் சூழ் திண் மதிள் துவரை வேந்து ⋆
தன் மைத்துனன் மார்க்காய் ⋆
அரசினை அவிய அரசினை அருளும் ⋆
அரி புருடோத்தமன் அமர்வு ⋆
நிரை நிரை ஆக நெடியன யூபம் ⋆
நிரந்தரம் ஒழுக்கு விட்டு ⋆
இரண்டு கரை புரை வேள்விப் புகை கமழ் கங்கைக் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ‖ **4.7.8** ‖

‡ வட திசை மதுரை சாளக்கிராமம் ⋆
வைகுந்தம் துவரை அயோத்தி ⋆
இடம் உடை வதரி இடவகை உடைய ⋆
எம் புருடோத்தமன் இருக்கை ⋆
தடவரை அதிரத் தரணி விண்டிடியத் ⋆
தலைப்பற்றிக் கரை மரம் சாடி ⋆

கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ॥ **4.7.9** ॥

‡ மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் ⋆
மூன்றெழுத்தாக்கி ⋆
மூன்றெழுத்தை ஏன்று கொண்டிருப்பார்க்கிரக்கம் நன்குடைய ⋆
எம் புருடோத்தமன் இருக்கை ⋆
மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி ⋆
மூன்றினில் மூன்றுருவானான் ⋆
கான் தடம் பொழில் சூழ் கங்கையின் கரை மேல் ⋆
கண்டம் என்னும் கடி நகரே ॥ **4.7.10** ॥

‡ பொங்கொலி கங்கைக் கரை மலி கண்டத்து ⋆
உறை புருடோத்தமன் அடி மேல் ⋆
வெங்கலி நலியா வில்லிபுத்தூர்க் கோன் ⋆
விட்டுசித்தன் விருப்புற்று ⋆
தங்கிய அன்பால் செய் தமிழ் மாலை ⋆
தங்கிய நா உடையார்க்கு ⋆
கங்கையில் திருமால் கழல் இணைக் கீழே ⋆
குளித்திருந்த கணக்காமே ॥ **4.7.11** ॥

அடிவரவு — தங்கையை சலம் அதிர் இமையவர் உழுவதோர் தலைப்பெய்து வில் திரை வடதிசை மூன்று பொங்கு மாதவத்தோன்

தங்கையை மூக்கும் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்